திருப்பூர் வடக்கு மாவட்டம், புதிய பேருந்து நிலையம் பகுதியில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் முன்னிலையில் ஆளுநர் திருப்பி அனுப்பிய அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று வழங்கிய உச்சநீதிமன்ற தீர்ப்பைக் கொண்டாடும் வகையிலும், இந்த முயற்சிக்கு தீவிரமாக போராடி மாநில உரிமைகளை பெற்றுத்தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

‘மாணவர்கள் தனித்திறனோடு பட்டதாரிகளாகிட வேண்டும்’! எனும் நோக்கில் முதல்வர் தொடங்கிய

‘நான் முதல்வன்’ திட்டத்தால் 30 இலட்சம் பேர் பயன்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

சென்னை, ஏப். 11- சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தில் போது பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் - முனைவர் கோவி. செழியன், “மாணவர்கள் தனித்திறனோடு பட்டதாரிகள் ஆகிட வேண்டும் எனும் நோக்கில் முதல்வர் தொடங்கிய ‘நான் முதல்வன்’ திட்டத்தால் இதுவரை 30 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்” என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

ஏ.ஜி.வெங்கடாசலம்: அந்தியூரில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன் வருமா?

அமைச்சர் முனைவர் கோவி. செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 11-4-2022 அன்று சட்டமன்றப் பேரவையில் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 2022-2023 கல்வி ஆண்டு முதல் ஈரோடு மாவட்டம், அந்தியூரில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது!

ஏ.ஜி.வெங்கடாசலம்: அந்தியூரிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கப்பட்டு, தற்போது அந்தியூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலே 700 மாணவர்கள், பழங்குடியின மக்கள், பட்டியலின மாணவ மாணவிகள் மற்றும் வறுமையின் பிடியிலே இருக்கின்ற மாணவ செல்வங்களெல்லாம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாம் ஆண்டு நிறைவிலே படித்து முடிக்கவிருக்கும் மாணவ மாணவிகள் 150 பேர்

வேலைவாய்ப்புக்கும் தேர்வாகியுள்ளனர். மேலும், எங்கள் கல்லூரிக்கு கூடுதலாக B.Com. CA, B.B.A., B.C.A. ஆகிய பாடப் பிரிவுகள் இந்த ஆண்டு துவக்கப்படுமா?

அமைச்சர் முனைவர் கோவி. செழியன்: கழக அரசு அமைந்த இந்த 4 ஆண்டுகளில், 32 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்த முதல்வர், நம்முடைய தன்னிகரில்லாத முதல்வர், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டப் பேரவையின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அறிவிக்கப்பட்டு, அதில் ஒன்று அந்தியூரில் தொடங்கப்பட்டது. அதில், தமிழ், ஆங்கிலம், வணிகவியல், கணிதம் மற்றும் கணினி அறிவியல் ஆகிய 5 பாடப் பிரிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 700-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். தற்காலிக கட்டடத்தில் தான் அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் உறுப்பினர் அவர்கள் கூடுதல் பாடப் பிரிவுகள் வேண்டுமென்றும், முதுகலை பட்டங்களுக்கான பாடப் பிரிவுகள் துவங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தற்காலிக கட்டடத்தில் இயங்குவதை அரசு கட்டடமாக மாற்றுகின்ற பெரு முயற்சியை அரசு மேற்கொள்கிறது. அது தொடரும்பட்சத்தில் கூடுதல் பாடப் பிரிவும், முதுகலை பட்டத்திற்கான பாடப் பிரிவும் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, வழங்கப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.ஜி.வெங்கடாசலம்: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மேலும், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலே Polytechnic கல்லூரி வேண்டுமென்று நீண்ட நாட்களாக எங்கள் தொகுதியினுடைய மாணவ, மாணவியர்களும், பெற்றோர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள் வறுமையோடு கஷ்டப்படுகின்ற அந்த மாணவ, மாணவிகளின் வாழ்வாதாரத்திற்காக Polytechnic கல்லூரி எங்கள் அந்தியூரில் அமைக்கப்பட வேண்டுமென்ற மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தங்களுடைய மானியக் கோரிக்கையில் நிறைவேற்றித் தருவார்களா?

அமைச்சர் முனைவர் கோவி. செழியன்: Polytechnic கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை என்பது நவீன வளர்ச்சியும், பொறியியல் கல்லூரியினுடைய பெரும் ஆதிக்கமும் இருந்த காரணத்தினால் Polytechnic கல்லூரியில் மாணவர் சேர்க்கை சற்று குறைந்த வண்ணம் இருந்தது. அந்த தொய்வை போக்கக்கூடிய வகையில் தான் தன்னிகரில்லாத தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் ஒரு மாணவன் தனித் திறனோடு அவன் பட்டதாரி ஆக வேண்டுமென்று ‘நான் முதல்வன்’ திட்டத்தில் 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை பயனாளிகளாக ஆக்கிய பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சாரும்.

எனவே, ‘நான் முதல்வன்’ திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் Polytechnic-ல் படிக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கிற பெரு முயற்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அப்படி இருந்தும் சில Polytechnic-களில் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. கூடுதல் பாடத் திட்டத்தைச் சேர்த்து வரும் ஆண்டில் அந்தக் குறைகள் போக்கப்படும் என்ற நம்பிக்கையை இந்த நேரத்தில் வழங்கி, உறுப்பினர் கேட்கக்கூடிய அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்கு Polytechnic, அங்கிருக்கிற மாணவர் சேர்க்கை, விகிதாச்சார அடிப்படையில் கணக்கிட்டு முதல்வர் அவர்களிடம் கலந்துபேசி விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் திருவிடைகழி கிராமத்தில் இருந்து மயிலாடுதுறைக்கு மகளிர் விடியல் பயண புதிய பேருந்து சேவையை மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா.முருகன் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.உடன்சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம்.சித்தி, ஒன்றிய கழக செயலாளர் எம்.அப்துல் மாலிக், பி.எம். அன்பழகன், அமிர்த. விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா மற்றும் பலர் உள்ளனர்.

அணைக்கட்டு தொகுதி – வண்ணந்தாங்கல் ஊராட்சி – கோட்டைத் தெருவில்

வீடுகளுக்கு மேலே செல்லும் மின்கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைத்திடுவீர்!

சட்டப் பேரவையில் – ஏ.பி. நந்தகுமார் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.11- சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் பேசிய, அணைக்கட்டு தொகுதி கழக உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார், “அணைக்கட்டு தொகுதி – வண்ணாந்தாங்கல் ஊராட்சி – கோட்டைத் தெருவில் வீடுகளுக்கு மேலே செல்லும் மின்கம்பிகளை வேறு பாதையில் மாற்றி அமைக்க வேண்டும்!” என்று வேண்டுகோள் விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:

ஏ.பி.நந்தகுமார் : அணைக்கட்டு தொகுதி, வண்ணாந்தாங்கல் ஊராட்சி, கோட்டைத் தெரு வில் வீடுகளுக்கு மேலே செல்லும் மின்கம்பிகளை வேறுபாதையில் மாற்றியமைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி : அணைக்கட்டு தொகுதி, வண்ணாந்தாங்கல் ஊராட்சி, கோட்டைத் தெருவில் மேலே செல்லும் உயர்வழுத்த/தாழ்வழுத்த மின்பாதைகளின்கீழ் சுமார் 6 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்படி மின்பாதைகள் மாற்றியமைப்பதற்கு விண்ணப்பம் பெறப்பட்டு, 21-10-2024 அன்று பதிவு செய்யப்பட்டது. மதிப்பீட்டுத் தொகை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 240 ரூபாய், 20-12-2024 அன்று செலுத்தப்பட்டு, 90 சதவிகித பணிகள் முடிவடைந்த நிலையில், ஆட்சேபனை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆட்சேபணை நிவர்த்தி செய்ய தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவாக, அதற்கான பணிகள் முழுமையாக முடிக்கப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.பி. நந்தகுமார்: இந்திய துணைக்கண்டத்தில் உள்ள மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விவசாயிகளுக்கு முதன்முதலில் pumpset-க்கு இலவச மின்சாரத்தை வழங்கி, விவசாயிகளின் வாழ்வில் ஒளி ஏற்றியவர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அவர் வழியே, 1 இலட்சத்து 90 ஆயிரம் விவசாயிகளுக்கு புதிதாக இலவச மின்சாரத்தை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை விவசாயி என்கின்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, வண்ணாந்தாங்கல் ஊராட்சியில் கொட்டாவூர் கிராமத்தில் வீடுகளுக்கு மேல் செல்லும் HT line-யை மாற்றித்தர மின்சார வாரியத்தில் கோரிக்கை வைத்தபோது, 2 இலட்சத்து 94 ஆயிரத்து 200 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அங்கேயிருக்கக்கூடிய பொதுமக்கள் இல்லங்களின் மேல் செல்லக்கூடிய அந்த மின் wire-களை மாற்றுவதற்கு அவர்கள் ரூபாய் 2 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கட்டி விட்டார்கள். இதுவரை அது மாற்றியமைக்கப்படவில்லை. மாற்றி அமைத்துத் தரப்படும் என்று மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வீடுகளுக்கு மேல் அவர்களுடைய அனுமதியில்லாமல் மின் wire-களை செலுத்தி விட்டு செல்கிறார்கள். அதை மாற்றுகின்றபோது, ஏழை மக்கள் இடத்தில் பணம் கட்ட வேண்டுமென்ற நிலை வருகின்றபோது, அவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, அந்த line-யை போடுகின்றபோதே, அந்த வீடுகளுக்கு மேல் அந்த line போகாத மாதிரி மின்மாற்றிகளை அமைத்துத் தர வேண்டும்.

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி: சில இடங்களில் line போட்ட பிறகுதான் வீடே கட்டுகிறார்கள். அதனால் அதையும் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முழுமையாக தொகை செலுத்தப்பட்டு, 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. அங்கு ஆட்சேபணை இருக்கிற காரணத்தினால், பணிகள் தாமதமாகின்றன. ஆட்சேபணையை நிவர்த்தி செய்வதற்காக தொடர்ந்து அதிகாரிகள் பேசி வருகிறார்கள். விரைவாக அது சரி செய்யப்பட்டு, உடனடியாக மீதம் இருக்கக்கூடிய 10 சதவிகிதப் பணிகளும் முடிக்கப்பட்டு, அந்த மின் வழித்தடங்கள் மாற்றியமைக்கப்படும்.

ஏ.பி. நந்தகுமார்: என்னுடைய அணைக்கட்டு தொகுதி

யிலுள்ள பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை, பாலாம்பட்டு ஆகிய மலைக் கிராமங்களுக்கு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சாலை வசதியே இல்லாத நிலையைப் போக்கி, அந்த மலைவாழ் மக்களுக்கு சாலை அமைத்து தந்தவர் தலைவர் தளபதி அரசு. அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மலைக்கு செல்லக்கூடிய அந்த மின் வயர்கள் மலைக் கிராமங்களில் மின்சாரம் தடைபடுகிறபோது எங்கேயாவது cut ஆகிவிட்டது என்று சொன்னால், மின்சாரம் வருவதற்கு 2, 3 நாட்கள் ஆகின்றன. 20 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட அந்த மலைக் கிராமங்களுக்கு புதிதாக தார்ச்சாலை அமைத்து தந்தவர் முதலமைச்சர் அவர்கள். அந்த தார்ச்சாலை வழியாக கேபிள்களை அமைத்துத் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டம் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்தபோது ஏலகிரி ஏழைகளின் ஊட்டி என்று சொல்வார்கள். அந்த ஏலகிரியில் சற்றேறக்குறைய 200 resort-கள் இருக்கின்றன. மின் தடை ஏற்படுகிறபோது அங்கே உள்ள அந்த 200 resort-களிலும் மின்சாரம் தடைபடுகிற நிலை இருக்கிறது. அங்கே 2 ஏக்கர் நிலமும் தந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் தேவராஜி அவர்களும் அதுகுறித்த கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த 2 ஏக்கர் நிலப்பரப்பிலே துணை மின் நிலையம் அமைத்துத் தர முன்வருவார்களா?

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி: உறுப்பினர் அவர்களுக்கு அங்கு resort இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஏற்கெனவே, உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து என்னிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, முதலமைச்சர் அவர்கள் 8 புதிய துணை மின் நிலையங்கள், 2 துணை மின் நிலையங்கள் தரமுயர்த்துதல் என மொத்தம் 10 துணை மின் நிலையங்களுக்கான அனுமதிகளை வழங்கியிருக்கிறார்கள். அதிலே அணைக்கட்டு தொகுதியில் 2 புதிய துணை மின் நிலையங்கள், 1 துணை மின் நிலையம் கூடுதலாக தரமுயர்த்துதல் என

3 பணிகளுக்காக முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதி பெறப்பட்டிருக்கிறது. கூடுதலாக, ஏலகிரி மலைப்பகுதியில் துணை மின் நிலையம் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே, துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, தேவை ஏற்பட்டின் நிச்சயமாக, அதை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைக் கிராமங்களிலுள்ள மின் வயர்களை கேபிள் வழித்தடமாக மாற்றித்

தர வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மின் வாரியத்தினுடைய நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ரிஷிவந்தியம் தொகுதி:

ஈருடையாம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம்!

சட்டப் பேரவையில் வசந்தம் கார்த்திகேயன் கோரிக்கை!

சென்னை, ஏப். 11- பேரவையில் கேள்வி நேரத்தின்போது, ரிஷிவந்தியம் தொகுதி உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் கேட்ட கேள்வியும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-

க. வசந்தம் கார்த்திகேயன்: ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட ஈருடையாம்பட்டு ஊராட்சி 8,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய ஊராட்சியாகும். அதையொட்டியுள்ள பெரிய கொள்ளியூர், சின்ன

கொள்ளியூர் ஈருடையாம்பட்டு, மாமாந்தூர் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த பொதுமக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால் அருகிலுள்ள மணலூர்பேட்டை அல்லது மூங்கில்துறைப்பட்டு செல்ல வேண்டிய நிலைமையுள்ளது. ஆகவே, அமைச்சர் அவர்கள் ஈருடையாம்பட்டு ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வருவார்களா?

மா.சுப்பிரமணியன்: இந்த மன்றத்தில் ஏற்கெனவே பல முறை அதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது என்றாலும், கடந்த மாதம் ஒன்றிய அமைச்சர் அவர்களைச் சந்தித்து, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 50 வேண்டுமென்கின்ற கோரிக்கை விடுக்கப்பட்டி ருக்கிறது.

அது கிடைக்கப்பெறின் நிச்சயம் நம்முடைய மாமன்ற உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்படும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில், பாசிச பா.ஜ.கவின் கைக்கூலி ஆளுநர் என்.ஆர்.ரவி திருப்பி அனுப்பிய அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கொண்டாடும் வகையிலும், இந்த முயற்சிக்கு தீவிரமாக போராடி மாநில உரிமைகளை பெற்றுத் தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், கும்பகோணம் உச்சிப்பிள்ளையார் கோவில் அருகில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது, பகுதிச் செயலாளர்கள் கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.அசோக்குமார், எல்.ராஜேந்திரன், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், எஸ்.ரவிச்சந்திரன், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் எஸ்.முருகன், டி.ஆர்.அனந்தராமன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

குமாரபாளையத்தில் வடக்கு நகர கழக சார்பில் நீர் மோர் பந்தல்!

மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி திறந்து வைத்தார்!

நாமக்கல், ஏப்.11- நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் வடக்கு நகர தி.மு.க. சார்பில் நீர் மோர்ப்பந்தல் திறப்பு விழா நடந்தது. வடக்கு நகர பொறுப்பாளரும், நகராட்சி தலைவருமான விஜய்கண்ணன் தலைமை வகித்தார். பள்ளிபாளையம் பிரிவு பகுதியில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை மாவட்டக் கழகப். செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி திறந்து வைத்தார். பொதுமக்களுக்கு இளநீர், தர்பூசணி, அன்னாசி, முலாம்பழ ஜூஸ், நீர்மோர் ஆகியன வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் நகராட்சி துணை தலைவர் வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட பொருளர் ராஜாராம், முன்னாள் நகர செயலர் செல்வம் உள்பட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக குமாரபாளையத்தில் வடக்கு மற்றும் தெற்கு நகர தி.மு.க. சார்பில் வரவேற்பு வழங்கப்பட்டது. நகராட்சி தலைவர் விஜய்கண்ணன், தெற்கு நகர பொறுப்பாளர் ஞானசேகரன், நகராட்சி துணை தலைவர் வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட பொருளர் ராஜாராம், முன்னாள் நகர செயலர் செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் வார்டு செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவை தெற்கு மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி சூலூர் பேரூராட்சிக்குட்பட்ட ஐந்தாவது வார்டு பாகம் எண் 145,152 ஆகிய பகுதிகளில் வீடு வீடாகச் சென்று மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார் உடன் சு.கவுதமன், மாணவர் அணி அமைப்பாளர் சூலூர் பிரபு தண்டாயுதபாணி, பேரூராட்சி மன்ற உறுப்பினர் சன்மதி, ராஜ்குமார்,மாணவர் அணி மோகன்,கார்த்தி,பேரூர் சுபாஷ் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.